6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஏ) பேரவைக் குழுக்களுக்கான உறுப்பினர்கள் தேர்வு

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2024–2025 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு (Committee on Estimates) பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பின்வரும் பதினாறு உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன:

1. திரு. S. அம்பேத்குமார்
2. திரு. தா. உதயசூரியன்
3. திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்
4. திரு. எஸ். காந்திராஜன்
5. டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்
6. திரு. எஸ். சுதர்சனம்
7. திரு. மு. பன்னீர்செல்வம்
8. திரு. ஈ. ராஜா
9. திரு. P.R.G. அருண்குமார்
10. திரு. செல்லூர் கே. ராஜூ
11. திரு. சேவூர் S. இராமச்சந்திரன்
12. திரு. ஓ.எஸ். மணியன்
13. திரு. இராம. கருமாணிக்கம்
14. திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்
15. திரு. S.S. பாலாஜி
16. திரு. மா. சின்னதுரை

நியமனம் செய்யப்பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 2024–2025 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக்

2024 ஜூன் 29] [பேரவைத் தலைவர்]

குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றதாக அறிவிக்கின்றேன்.

தவிர, நிதித் துறைக்குப் பொறுப்பு வகிப்பவர் என்கின்ற முறையில் மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவை விதி 196-ன்கீழ், திரு. எஸ். காந்திராஜன் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமனம் செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) பொதுக் கணக்குக் குழு

2024-2025 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவிற்கு (Committee on Public Accounts) பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பின்வரும் பதினாறு உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன:

1. திரு. ப. அப்துல் சமது
2. திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்
3. திரு. கோ. ஐயப்பன்
4. திரு. S. சந்திரன்
5. திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி
6. திரு. ஐ.பி. செந்தில் குமார்
7. திரு. R.D. சேகர்
8. திரு. மொ. பழனியாண்டி
9. திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி
10. திரு. S. சேகர்
11. திரு. நத்தம் ஆர். விசுவநாதன்
12. திரு. கே.ஆர். ஜெயராம்
13. திரு. கு. செல்வபெருந்தகை
14. டாக்டர் சி. சரஸ்வதி
15. திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்
16. திரு. ட்டி. இராமச்சந்திரன்